தமிழர் நினைவேந்தல் அகவம் – சுவிஸ்
Tamilar Remembrance Foundation - Swiss
Postfach 439, 4528 Zuchwil / www.trfswiss.com / trfswiss@gmail.com

# தமிழீழத் தேசிய மாவீரர் நினைவுப் பேச்சுப்போட்டி 2025

**15 வயதுப்பிரிவு**
(01.01.2010 – 31.12.2011 வரையில் பிறந்தோர்)

## தமிழரின் தலைநிமிர்வு எங்கள் தலைவர் மாமா

தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள் தமிழரின் தலைநிமிர்வு. அவர் உலகமே வியக்கும் தமிழீழ விடுதலைப்படை கட்டிய பெருவீரன். தன்னலம் இல்லாத தன்மானத் தமிழன். தாய்மண்ணை நேசிக்கக் கற்றுத்தந்த பேராசான். கல்லுக்குள் இருக்கின்ற ஈரம் போல், செயலுக்குள் சொல் வைத்த வியப்பு!

எல்லாமும் நிறைந்த நாடாகத் தமிழீழத்தைக் கட்டியெழுப்பத் திடங்கொண்ட ஆளுமை. முப்படைகொண்டு எப்படையையும் எதிர்த்து நின்ற தீரன். விடுதலைக்காய் போராடும் சமகாலத்திலேயே தமிழீழத் தனியரசை நிர்மாணித்த எதிர்வுகூறல். உலகில் எந்த இனத்துக்கும் வாய்க்காத வல்ல தலைவனைப் பெற்றவர்கள் நாம். அதனால் எமக்கு எப்போதும் இருக்கும் இறுமாப்பு!

பதினாறு வயதில் பதறாமல் சிதறாமல் பக்குவமாய் படைகட்டப் புறப்பட்ட புலி அவர். எதிர்ப்புகளையும் சவால்களையும் துரோகங்களையும் தன் மதிநுட்பத்தாலும் மனவலிமையாலும் எதிர்கொண்டு மீண்டவர். ஒழுக்கமும் போர் அறமும் தணியாத விடுதலைப் பற்றும் கொண்ட விடுதலைப் படையை உலக இராணுவத் தரத்தில் தகவமைத்துக் காட்டிய சிற்பி.

பாதுகாப்பும் கல்வியும் பொருண்மிய மேம்பாடும் பண்பாட்டு விழுமியங்களும் நிறைந்த தேசமாகத் தமிழீழத்தைக் கட்டியெழுப்பிய மாமன்னன்! காட்டுக்குள் வாழ்ந்தபோதும் நிகழரசை நிகழ்த்தியபோதும் எம் தலைவரைத் தேடிவந்தே சந்தித்தனர் வெளிநாட்டுப் பிரதிநிதிகள். அரசியலையும் போர்த்திறமென நிலைநிறுத்திய எம் தலைவன்போல் வேறொருவர் எங்கும் இல்லை. விடுதலைக்காகப் போராடும் இனங்களுக்கு அவரே எடுத்துக்காட்டு.

தெற்காசியப் பரப்பெங்கும் புலிக்கொடியோடு வலம் வந்த சோழர் வீரத்தை நினைவுபடுத்தியவர். அடங்குவதும் அடிபணிவதும் தமிழர் வரலாற்றிலேயே இல்லை. எம் தலைவனே தமிழினத்தின் காவலன். நிகழ்காலத்துக்கும் எதிர்காலத்துக்கும் எம்மைப் புடம்போட்டு உருவாக்குபவர் எங்கள் தலைவர் மாமா. அவரது சிந்தனைகளை நாம் எமக்குள் பதியமிட்டுள்ளோம்.

வெந்து தணிகின்ற காட்டிடை பொந்துக்குள் வாழ்கின்ற அக்கினிக் குஞ்சுகள் நாங்கள். இளமைத் துடிப்பும் தீராத தமிழீழத் தாகமும் அளவிட முடியாத உறுதியும் கொண்டு நிற்கிறோம். தமிழரின் தலைநிமிர்வாம் பிரபாகரப் பெருவீரம் எங்கள் வழிகாட்டி! தமிழீழத் தனியரசை மீட்டாள்வோம்.

"தமிழரின் தாகம் தமிழீழத்தாயகம்"